# பரீட்சகரின் அறிக்கை

## AA2 பரீட்சை – 2016 யூலை

## (AA26) வியாபார முகாமையும் தந்திரோபாயமும்

---

## பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

### வினா இல. 01

இவ்வினா மொத்தம் 20 புள்ளிகளுக்காக ஒவ்வொன்றும் 02 புள்ளிகளைக் கொண்ட 10 நோக்கச் சோதனை வினாக்களைக் கொண்டுள்ளது.

வினா இலக்கம் 1.1 தொடக்கம் 1.5 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட விடைகளிலிருந்து மிகவும் பொருத்தமான விடையினைத் தெரிவுசெய்து, தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை விடைப் புத்தகத்தில் எழுதுதல் வேண்டும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் அறிவுறுத்தல்களைப் பின்பற்றியிருந்த அதேவேளை சிலர் விடை இலக்கத்தை எழுதுவதற்குப் பதிலாக முழு விடையினையும் எழுதியிருந்தனர்.

வினா இலக்கம் 1.6 தொடக்கம் 1.10 வரையான வினாக்களுக்காக அடைப்புக்குறியினுள் தரப்பட்ட இரு விடைகளில் வெற்றிடத்தைப் நிரப்புவதற்குத் பொருத்தமான விடையினைத் தெரிவுசெய்து, தெரிவுசெய்த விடையினை விடைப்புத்தகத்தில் எழுதுதல் வேண்டும். பல பரீட்சார்த்திகள் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி திருப்திகரமான விடைகளை வழங்கியிருந்தனர்.

பொதுவாக பின்வரும் வினாக்களுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### <u>வினா இல. 1.5</u>

குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள், தரப்பட்ட அனைத்தும் மாற்றத்திற்கான தடையின் மூலங்களுடன் தொடர்புபட்டவை என்பதை அடையாளங்காணத் தவறியிருந்தனர்.

### <u>வினா இல. 1.10</u>

அதிகளவான பரீட்சார்த்திகள் பல்வகைப்படுத்தல் தந்திரோபாயம், ஒருமுகப்படுத்தல் தந்திரோபாயம் பற்றி எவ்வித தெளிவான கருத்தையும் கொண்டிருக்கவில்லை.

பரீட்சார்த்திகள் இவ்வகையான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பாட விடயத்தில் தெளிவான விளக்கத் தினைப் பெற்றுக்கொள்ள வேண்டியது முக்கியமானதாகும். இது புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு இலகுவான வினாவாகும். சுய கற்றல் பொதியைச் சரியாகப் படிப்பது வெற்றிகரமான புள்ளிகளைப் பெறுவதற்கு உதவி புரியும்.

## பகுதி B

இந்தப் பகுதி ஒவ்வொன்றும் 05 புள்ளிகளைக் கொண்ட ஐந்து வினாக்களைக் கொண்டுள்ளது.

### வினா இல. 02

இவ்வினாவில் நிறுவனமொன்றின் உற்பத்தித்திறனை மேம்படுத்த வினைத்திறனும் விளைதிறனும் எவ்வாறு உதவுகின்றன என்பதை விளக்குமாறு கோரப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முனைந்திருந்தபோதிலும், அவ்வொவ்வொரு சொற்பதத்தினாலும் விளக்கப்படுவது யாதெனச் சரியாக வேறுபடுத்தி இனங்காண முடியாதிருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது. மேலும், உற்பத்தித் திறனை மேம்படுத்துவதில் வினைத்திறனும் விளைதிறனும் எவ்வாறு உதவுகின்றன என்பதை விபரிப்பதற்கு அவ்விரண்டிற்குமிடையிலான தொடர்பு பற்றிய தெளிவான அறிவை அவர்கள் கொண்டிருக்கவில்லை.

### வினா இல. 03

முகாமையாளரின் பக்கத்தில் காணப்படுகின்ற அதிகாரக் கையளிப்புக்கான 05 தடைகளைக் குறிப்பிடுமாறு இவ்வினாவில் கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இதற்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர். ஒரு சிலர் வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளைக் கருத்திற்கொள்ளாது தேவையற்ற விதத்தில் தங்களுடைய நேரத்தை வீணடித்து மிகவும் விளக்கமான விடைகளை எழுதியிருந்தமை அவதானிக்கப்பட்டது. இங்கு ‘‘குறிப்பிடுக’’ எனக் கேட்கப்பட்டதைப் புறக்கணித்து விபரமான விபரிப்புகள் வழங்கப்பட்டிருந்தன. ஒரு சிலர் ஊழியர் பக்கத்தில் காணப்படுகின்ற தடைகளைக்கூட எழுதியிருந்தனர்.

### வினா இல. 04

இவ்வினாவில் நிறுவனமொன்றில் தொடர்பாடலின் முக்கியத்துவத்தை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. இதற்கு அதிகளவான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்திருந்தனர். வேறு சில பரீட்சார்த்திகள் வினாவில் என்ன எதிர்பார்க்கப்பட்டது என்பதையும் ‘‘நிறுவனம் ஒன்றில்’’ என்னும் சொற்பதத்தைக் கருத்திற் கொள்ளாமலும் வெறுமனே தொடர்பாடல் என்பதால் கருதப்படுவது யாது என்பதையும் தொடர்பாடலின் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்களையும் விளக்கியிருந்தனர். நிறுவனம் ஒன்றில் தொடர்பாடலின் முக்கியத்துவம் பற்றி கவனம் செலுத்தப்படவில்லை.

### வினா இல. 05

சமூகப் பொறுப்புணர்வுடன் செயற்படுவதன் மூலம் நிறுவனமொன்று பெறக்கூடிய அனுகூலங்களைக் குறிப்பிடுமாறு இவ்வினாவில் கேட்கப்பட்டது. இதற்காக வழங்கப்பட்டிருந்த விடைகள் அனைத்தும் வெற்றிகரமானதாக இருந்தது. மொத்தப் புள்ளிகள் ஐந்தினையும் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அனுகூலங்கள் எழுதப்பட்டிருந்தன. இது ஒரு இலகுவான வினாவாக இருப்பினும் சில பரீட்சார்த்திகள் விபரமான விவரணங்களையும் சம்பந்தமற்ற விடயங்களையும் எழுதியிருந்ததன் மூலம் தமது நேரத்தை வீணடித் திருந்தனர்.

### வினா இல. 06

இவ்வினா மைக்கல் போட்டரின் பெறுமானச் சங்கிலி மாதிரியின் முதன்மைச் செயற்பாடுகளை விபரிக்குமாறு கோரியிருந்தது. இவ்வினாவுக்கான விடைகள் திருப்திகரமானதாக அமையாததுடன் சில பரீட்சார்த்திகள் விடையளிக்காதும் விட்டிருந்தனர். குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் வினாவில் எதிர்பார்க்கப்பட்ட பெறுமானச் சங்கிலி மாதிரிக்குப் பதிலாக மைக்கல் போட்டரால் அறிமுகப்படுத்தப்பட்ட வேறு கோட்பாடுகள் பற்றி எழுதியிருந்தனர். **உதாரணம்** : போட்டரின் பொதுத் தந்திரோபாயங்கள், போட்டரின் ஐம்படைகள்.

சிறு தொகையான பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கிக்கொண்டு விடையளித்திருந்தனர். பரீட்சார்த்திகள் சுய கற்றல் பொதி மீது கவனஞ் செலுத்துவதன் மூலம் வியாபார முகாமையும் தந்திரோபாயமும் பற்றிய இவ்வகை வினாக்களுக்கு இலகுவாக விடையளிக்க முடியும்.

## பகுதி C

இவ்வினா ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்ட 03 கட்டாய வினாக்களைக் கொண்டுள்ளது.

### வினா இல. 07

இவ்வினாவின் மூலம் முகாமைத்துவத்துடன் சம்பந்தப்பட்ட முகாமைத்துவ அணுகுமுறைகள் மற்றும் அடிப்படை வியடங்கள் என்பன பரீட்சிக்கப்பட்டன. தரப்பட்ட விவரணத்தில் உள்ள தற்போதைய முகாமைத்துவ அணுகுமுறையின் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள்கூட விபரிக்கப்பட வேண்டியிருந்தது.

தரப்பட்ட விடய ஆய்வில் முகாமைத்துவ அணுகுமுறையை அடையாளங்காணுமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டனர். அதிகளவான பரீட்சார்த்திகள் அணுகுமுறையை அடையாளங்காணாததால் அவர்களால் ஈடடப்பட்ட புள்ளிகள் மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. அவர்களில் பலர் பாரம்பரிய அணுகுமுறையைக் குறிப்பிட்டிருந்தனர். ஆனால் விடையானது அதிகாரத்துவ அணுகுமறை என மிகவும் திட்டவட்டமாக இருத்தல் வேண்டும். சுய கற்றல் பாடப்புத்தகத்தில் கவனத்தைச் செலுத்தியிருப்பின் புள்ளிகளை இலகுவாகப் பெற்றிருக்க முடியும்.

தரப்பட்ட கம்பனியின் தற்போதைய முகாமைத்துவ அணுகுமுறையின் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங் களை விபரிக்குமாறு பகுதி (b) தேவைப்படுத்தியிருந்தது. பகுதி (a) இற்குச் சரியாக விடையளிப்பதற்கான ஆற்றல் காணப்படாததால் பகுதி (b) இற்கான புள்ளிகளைப் பெறுவதும் வரையறுக்கப்பட்டிருந்தது. பரீட்சார்த்திகள் முகாமைத்துவ அணுகுமுறையைச் சரியாக இனங்காண்பதற்கு கோட்பாட்டுரீதியான அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

### வினா இல. 08

இவ்வினாவின் பகுதி (a) திட்டமிடல் செயன்முறையின் படிநிலைகளைப் பரீட்சித்திருந்த அதேவேளை பகுதி (b) நிறுவனமொன்றின் திட்டமிடல் மற்றும் கட்டுப்படுத்தலுக்கிடையிலான தொடர்பை விபரிக்குமாறு கோரியிருந்தது.

படிநிலைகளை எழுதும்போது, பரீட்சார்த்திகள் சரியான ஒழுங்குமுறையைப் பின்பற்றாதிருந்தனர் அல்லது அது பற்றிய அறிவு குறைவாக இருந்ததன் காரணமாக சில படிநிலைகளை எழுதாது விட்டு மற்றைய படிநிலைக்குத் தாவியிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவர்களில் பலர் திட்டமிடலுக்கும் கட்டுப்படுத்தலுக்கும் இடையிலான தொடர்பினைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கவில்லை.

பொதுவாக, பாடத்துடன் தொடர்புடைய விடயங்களில் புரிந்துணர்வு குறைவாகக் காணப்பட்டமை அவதானிக் கப்பட்டதுடன் வினாவினை விளங்கிக்கொள்ளாது விடைகளும் எழுதப்பட்டிருந்தன. இது ஒரு இலகுவான வினாவாக இருந்தபோதிலும் சில பரீட்சார்த்திகளின் குறைந்த மட்டத்திலான பரீட்சை முன்னாயத்தம் மற்றும் பாடப்பரப்பைக் கற்காதிருந்தமை போன்றவற்றால் புள்ளிகளைப் பெற முடியவில்லை. அவர்கள் கடந்தகால வினாப்பத்திரங்களுக்கு விடையளித்து பயிற்சி பெற்றிருப்பின் அல்லது கேட்கப்படக்கூடிய வாய்ப்புள்ள வினாக்களுக்கு விடையளித்துப் பயிற்சி பெற்றிருப்பின் அவர்களால் வெற்றிகரமாக விடையளிப்பதற்கு முடிந்திருக்கும்.

**வினா இல. 09**

அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவிற்கு வெற்றிகரமான முறையில் விடையளிக்கவில்லை. அளிக்கப்பட்ட விடைகள்கூட திருப்திகரமானதாக அமையவில்லை. அவர்கள் பாட விடயங்களைக் கற்பதன் மூலமோ, சுய கற்றல் பாடப்புத்தகத்தைக் கற்பதன் மூலமோ அல்லது விரிவுரைகளுக்குச் சமூகமளிப்பதன் மூலமோ பாட விடயங்களை முறையாகக் கற்றுக்கொள்ளவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. கலாசார வலையின் 04 ஆக்கக்கூறுகளை எழுதுவதற்கு, சில பரீட்சார்த்திகள் பாடப்பரப்பு தொடர்பில் விளக்கமின்றி பல்வேறு சம்பந்தமற்ற விடைகளை எழுதியிருந்தனர்.

தந்திரோபாயத்திற்கும் காலாசாரத்திற்குமிடையேயான தொடர்பினை விபரிப்பதற்கு எடுத்துக்காட்டுக்களை சமர்ப்பிக்கும்போது விபரமான விவரண நிகழ்வுகள் எழுதப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எடுத்துக்காட்டு என்பது விடையினை உறுதிப்படுத்துவதற்கான ஒரு விடயம் மாத்திரமே என்பதையும் இத்தகைய ஒரு வினாவுக்கான பூரணமான விடை அல்ல என்பதையும் பரீட்சார்த்திகள் விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். எவ்வாறாயினும் வினாவுக்குப் பொருத்தமான வெற்றிகரமான விடைகளை எழுதுவதற்கு பாட விடயம் பற்றி அதிகமாகத் தெரிந்துவைத்திருப்பதில் பரீட்சார்த்திகள் விழிப்புடன் இருத்தல் வேண்டும்.

## <u>பகுதி D</u>

இப்பகுதி இருபத்தைந்து (25) புள்ளிகளுக்காக 01 கட்டாய வினாவைக் கொண்டிருந்தது.

**வினா இல. 10**

பரீட்சார்த்திகளால் இவ்வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் திருப்திகரமாக இருந்தது.

**<u>பகுதி (a)</u>**

பகுத்தறிவான முறையில் பிரச்சினைகளைத் தீர்க்கும் செயன்முறையுடன் தொடர்புபட்ட படிநிலைகள் கேட்கப்பட்டிருந்தன. அதிகளவான பரீட்சார்த்திகள் பிரச்சினையை விளங்கிக்கொண்டிருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது. ஆயினும் சில பரீட்சார்த்திகள் குறித்த படிநிலைகளை எழுதாது நேரத்தை வீணடித்து விபரமாக எழுதியிருந்தனர். பரீட்சார்த்திகள் இவ்வகையான வினாக்களில் ஒழுங்குமுறைப்படி படிநிலைகளை எழுதுவதற்குப் போதுமானளவு விளக்கத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். வேறு சில பரீட்சார்த்திகள் பகுத்தறிவான முறையில் பிரச்சினைகளைத் தீர்க்கும் செயன்முறையை குறிப்பிட்டிருந்தாலும் அதனை அவர்கள் தரப்பட்ட விவரணத்துடன் தொடர்புபடுத்தவில்லை.

**<u>பகுதி (b) (i)</u>**

இப்பகுதிக்கு விடையளிக்கும்போது பொருத்தமான தலைமைத்துவ மாதிரி (எதேச்சதிகார / பணி முகாமைத்து /அதிகார உடன்பாட்டு) அடையாளம் காணப்பட்டிருந்தபோதிலும், அது விடய ஆய்விலிருந்தான விடயங்களுடன் உறுதிப்படுத்தப்படாது, அந்தத் தலைமைத்துவப் பாங்கின் பொதுவான பண்பியல்புகள் எழுதப்பட்டிருந்தன. நடைமுறை நிலைமையொன்றினை விளங்கிக்கொள்வதே விடய ஆய்விலிருந்து எதிர்பார்க்கப்பட்டதாகும். பரீட்சார்த்திகள் விடய ஆய்விலிருந்த விடயங்கள் ஊடாக அவர்களது விடைகளை உறுதிப்படுத்துவதற்கான விழிப்புடன் இருத்தல் வேண்டும்.

உதாரணம் : எதேச்சதிகார பாங்கு கூறப்பட்டதெனின்,

- உரிமையாளர் சகல தொழிற்பாடுகளிலும் செல்வாக்கைப் பிரயோகித்தல்
- ஊழியர்களுக்கான வரையறுக்கப்பட்ட விடுப்புகள்

அதேபோன்று அதிகார உடன்பாட்டுப் பாங்கு கூறப்பட்டதெனின்,

- செயலாற்றுகையை அடிப்படையாகக்கொண்ட சம்பளங்களும் படிகளும்
- நிறுவனத்தை அபிவிருத்தி செய்வதற்காக உயர்ந்தபட்ச அர்ப்பணிப்பு அவசியமாக உள்ளது என்பதைச் சிந்தித்தல்
- ஊழியர்களின் தனிப்பட்ட பிரச்சினைகளை ஒதுக்குதல்

**பகுதி (b) (ii)**

நிலைமையுடன் தொடர்புபட்ட பொருத்தமான தலைமைத்துவப் பாங்கு அடையாளங்காணப்படுதல் வேண்டும். சில பரீட்சார்த்திகள் குடியாட்சி / அணி முகாமைத்துவத்தை அடையாளங்கண்டிருந்தபோதிலும் விடய ஆய்விலிருந்தான சந்தர்ப்பங்களை / விடயங்களைப் பயன்படுத்தியமை பலவீனமான மட்டத்திலேயே காணப்பட்டது.

உதாரணம் : தகுதிவாய்ந்த தொழிற்பாட்டு முகாமையாளர்கள் இருப்பதாகக் கூறப்பட்டிருப்பதால், தீர்மானங்கள் அவர்களது ஆலோசனைகளுடன் எடுக்கப்பட்டிருப்பின் உற்பத்தி இலக்கினை அடைந்திருக்க முடியும் என்பதுபோன்ற விடயங்களை எழுதியிருப்பின் அது பரீட்சார்த்திகள் அதிக புள்ளிகளைப் பெற உதவியாக இருந்திருக்கும்.

**பகுதி (b) (iii)**

நிறுவனம் ஒன்றுக்கு நல்ல தலைமைத்துவமொன்று ஏன் முக்கியமானது என்பதற்கான 02 காரணங்களை எழுதுமாறு கோரப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இதற்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் குறித்த விடைகளை எழுதுவதற்குப் பதிலாக இலாபத்தை உச்சப்படுத்தல், வியாபார நோக்கங்களை அடைதல் போன்ற பொதுவான விடயங்களை விபரித்திருந்தனர்.

இவ்வகையான வினாவுக்கு மேலதிக புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் மற்றும் சுய கற்றல் பாடப்புத்தகங்கள் போன்றவற்றைக் கற்பதன் ஊடாக நன்றாக விடையளிக்க முடியும்.

**பகுதி (c)**

தரப்பட்ட விடய ஆய்வில் கம்பனி ஊழியர்களை ஊக்கப்படுத்துவதற்கு மாஸ்லோவின் தேவைப் படிநிலைக் கோட்பாட்டினை பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறினை கலந்தாய்வு செய்யுமாறு கேட்கப்பட்டிருந்தது. சில பரீட்சார்த்திகள் தேவைப் படிநிலையின் நியம தொடர் ஒழுங்கினை எழுதியிருக்கவில்லை. அந்தத் தேவைகளில் என்ன கூறப்பட்டது என்பதை வெளிப்படுத்தாமை, விவரணத்துடன் தொடர்பற்ற விடைகளை எழுதியிருந்தமை போன்றவை பரீட்சார்த்திகளின் விடைகளில் காணப்பட்ட பலவீனங்களாக அவதானிக் கப்பட்டன.

விடய ஆய்விலிருந்து தேவைப் படிநிலைக்கான உதாரணங்கள் வழங்கப்பட்டிருப்பின் அதிக புள்ளிகளைப் பெறுவதற்கான வாய்ப்புகள் காணப்பட்டது.

உதாரணம் : விபத்துகளிலிருந்து ஊழியர்களைப் பாதுகாப்பதற்கு பாதுகாப்பு உபகரணம் வழங்கப்படுதல், ஆயுள் காப்புறுதியினை ஒழுங்குபடுத்தல்

விடய ஆய்வில் உள்ளடக்கப்பட்ட விடயங்களுடன் மாஸ்லோவின் கோட்பாட்டை எவ்வாறு தொடர்புபடுத்தலாம் என்பது பற்றி பரீட்சார்த்திகள் அதிக விழிப்புணர்வுடன் இருத்தல் வேண்டும்.

உதாரணம் : இந்தக் கம்பனியின் ஊழியர்கள் தற்போது ஒப்பந்த அடிப்படையிலேயே வேலை செய்கின்றனர், அவர்கள் நிரந்தர அடிப்படையில் வேலை செய்யும்போது தொழில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு அவர்கள் ஊக்கப்படுத்தப்பட்டிருப்பர் என்ற விடயம் சுட்டிக்காட்டத்தக்கது.

மேலும், வினைத்திறனான முகாமையாளர்களுடன் ஆலோசித்து தீர்மானம் எடுப்பதன் மூலம் அவற்றின் நிறைவேற்றத்திற்கு அவர்களின் அங்கீகார அளவு உறுதிப்படுத்தப்படும். சுய மதிப்பு அவர்களை ஊக்குவிக்கும் என்ற விடயமும் சுட்டிக்காட்டத்தக்கது.

தரப்பட்ட விடய ஆய்வுடன் கோட்பாட்டுரீதியான அறிவை தொடர்புபடுத்துவதன் மூலம் இவ்வகை வினாக்களுக்கு விடையெழுதும் பொருட்டு, பரீட்சார்த்திகள் இதேபோன்ற கடந்தகால வினாக்களைப் பயிற்சி செய்வதன் மூலம் நிபுணத்துவத்தைப் பெறுதல் வேண்டும்.

## பரீட்சார்த்திகளின் ஆற்றல்சார் மட்டத்தினை விருத்திசெய்வதற்கு கவனத்திற்கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள் :

1. பாடத்திட்டத்தை முழுமையாகக் கற்றுத் தெளிவதுடன் புதிய பாட விடயங்கள் மீது அதிக கவனத்தையும் செலுத்தவும்.

2. வினாவை பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். வினாவில் நேரடியான மற்றும் துல்லியமானதொரு விடை எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுத வேண்டாம

3. வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச் சொல் நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள், செயல் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல் **வரைவிலக்கணத்தை** அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

4. விசேடமாகச் சுய கற்றல் உரைகள், புத்தகங்கள், கையேடுகள், கடிதங்கள், சஞ்சிகைகள், மத்திய வங்கி வருடாந்த அறிக்கைகள் மற்றும் பாடத்துடன் தொடர்புபட்ட ஏனையவைகளை கற்கவும்.

5. விடையெழுதும்போது அடிப்படை கோட்பாட்டுரீதியான எண்ணக்கருக்களைச் சரியாக இனங் காண்பதற்கும் ஒப்பிடுவதற்கும் தேவையான ஆற்றல்களைக் கட்டியெழுப்பவும்.

6. கையெழுத்து தெளிவாக இருப்பதையும் வினா இலக்கங்கள் உரிய இடங்களில் ஏற்றவாறு இடப்பட்டிருப்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

7. வினாப்பத்திரத்தில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

8. கடந்தகால வினாப்பத்திரங்களையும் விடைகளையும் கற்பதன் மூலம் உங்களது அறிவை மேம்படுத்திக் கொள்ளவும்.

9. முகாமைத்துவக் கோட்பாடுகளைச் சரியாக விளங்கிக்கொள்வதன் மூலம் அதனுடன் தொடர் புடையவைகளுக்கு இடையிலான வேறுபாடுகளைக் கட்டமைப்பதற்கு இயலுமாக இருத்தல் வேண்டும்.

10. நேர முகாமைத்துவம் முக்கியமானது.

11. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் சரியான இடங்களில் எழுதப் பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.

12. முன்னாயத்தத்துடனும் இயலுமான புள்ளிகளைப் பெறுகின்ற எதிர்பார்ப்பிலும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -